# COVID-19

# பரிசோதிக்கப்பட்ட பின்னர் என்ன செய்ய வேண்டும்

## வீட்டில் இருங்கள்.

முடிவுகளுக்காக நீங்கள் காத்திருக்கும்போது, வைரஸ் பரவுதலைத் தடுக்கும்பொருட்டு வீட்டில் உங்களைத் தனிமைப்படுத்திக்கொள்வது முக்கியமாகும். நீங்கள் பரிசோதிக்கப்படும்போது நோய்க்கான அறிகுறிகள் உங்களுக்கு இருந்திருந்தால், உங்களுடைய பரிசோதனை முடிவுகளுக்காக நீங்கள் காத்திருக்கும்போது, உங்களுடன் வசிப்பவர்களும் வீட்டிலேயே இருக்கவேண்டும்.

## தொலைபேசி அழைப்புக்குப் பதிலளியுங்கள்.

பரிசோதனை முடிவுகள் பற்றிக் கதைப்பதற்காக, பீல் பிராந்திய பொதுச் சுகாதாரப் பிரிவினர் உங்களை அழைப்பார்கள். பொதுச் சுகாதாரப் பிரிவுப் பணியாளர்களுடைய கேள்விகளுக்குப் பதிலளிப்பது உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் மற்றும் சமூகத்தினரையும் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும்.

## வீட்டிலிருப்போரைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

உங்களுக்கு நோய்க்குறிகள் ஏற்பட்டால் அல்லது உங்களுக்குப் பரிசோதனை செய்யப்படும்போது அறிகுறிகள் இருந்திருந்தால், நீங்கள் கூடி வாழ்பவர்களிடமிருந்து விலகி இருங்கள். முடியுமானால், உங்களுடைய சொந்த அறையிலேயே தங்கியிருங்கள், குளியலறையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாதீர்கள், முகக்கவசம் ஒன்றை அணிந்துகொள்ளுங்கள், உடல்ரீதியாக விலகியிருங்கள் அத்துடன் உங்களுடைய கைகளை அடிக்கடி கழுவுங்கள்.

## கேள்விகளைக் கேட்பதற்கு அழையுங்கள்.

பரிசோதனை முடிவுகளுக்காகக் காத்திருக்கும்போது உங்களிடம் கேள்விகள் இருந்தால், பீல் பொதுச் சுகாதாரப் பிரிவை 905-799-7700, (Caledon 905-584-2216) என்ற இலக்கத்தில் அழையுங்கள்.

CDS-0859 20/11

**மேலதிக தகவல்களுக்கு, peelregion.ca/coronavirus என்ற வலைத்தளைத்தைப் பார்வையிடுங்கள்.**

@regionofpeel @peelregion.ca @regionofpeel

Region of Peel
working with you